## இந்த ஏழை கூப்பிட்டான் / This **poor man** cried

*Praise the Lord:*

Let us pray.

நம்மை நாமே நோக்கிப்பார்த்து, நமது தகுதியுடன், நாம் தேவனை நோக்கி ஜெபிக்க இருக்கிறோம்.
நாம் ஒவ்வொருவரும் ஜெபிக்க இருக்கிறோம்.

நாங்கள் ராஜாக்களும், ஆசாரியர்களும் என்ற முறையில் ஜெபிக்கலாம்.

நாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் ஜெபிக்கலாம்.

நாங்கள் ஒரு பாடுள்ள மனிதன் என்ற முறையில் ஜெபிக்கலாம்.

நாங்கள் ஒரு பாவி என்ற முறையில் ஜெபிக்கலாம்.

இதெல்லாம் வேதத்திலே நம்மைப்பற்றி சொல்லியிருப்பதுதான்.
இன்னும் எவ்வளவோ விதமாக சொல்லப்பட்டிருக்கிறது.

இன்று இன்னுமொரு விதத்தைப் பார்த்து, நாம் ஜெபிப்போம்.

**சங்கீதம்/ Psalms 34:6**

இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.

This **poor man** cried, and the LORD heard him, and saved him out of all his troubles. (KJV)
This **poor man** called, and the LORD heard him; he saved him out of all his troubles. (NIV)
In **my desperation** I prayed, and the Lord listened; he saved me from all my troubles. (NLT)
The **helpless** call to him, and he answers; he saves them from all their troubles. (GNB)
This **afflicted one** called, and Jehovah heard him, and saved him out of all his troubles. (Darby)

*ஏழை என்ற வார்த்தையை கொஞ்சம் சிந்திப்போம். . . .*

Word reference: (Source: Dictionary and websites)

**Poor:** (from Englsih-Tamil Dictionary):

having no money, needy, எளிய, ஏழ்மையான, வறுமையான; feeble, lean, பலவீனமான, மெலிந்த; trifling, அற்பமான; pitable, இரங்கத்தக்க, பரிதாபகரமான; humble, தீனமான.

**ஏழை**: (தமிழ்-English அகராதி):

வறுமையில் இருப்பவர்; poverty stricken (person); the poor. போதிய பொருள் வசதி இல்லாத நிலை; state of being poor.

**desperation:** reckless, ஆபத்தை உணராத, ஆபத்தை உணர்ந்தும் பொருட்படுத்தாத, hopeless, நம்பிக்கையற்ற

**help:** assist, உதவிசெய், துணை செய். aid, துணை, உதவி, உபகாரம்.

**afflicted:** …trouble, இடுக்கண் உண்டாக்கு. Pain, misery, calamity, நோய், பெருந்துன்பம், விபத்து துன்பமுண்டாகக்கூடிய, வருத்தமுண்டாக்குகிற

**(from web www.dictionary.com)**

**Poor:**

1. **having little or no money,** goods, or other means of support: a poor family living on welfare.
5. deficient or lacking in something specified: a region poor in mineral deposits.
6. faulty or inferior, as in construction: poor workmanship.
7. **deficient in desirable ingredients, qualities, or the like: poor soil.**
9. of an inferior, inadequate, or unsatisfactory kind: poor health.
10. **lacking in skill, ability, or training: a poor cook.**
11. **deficient in moral excellence; cowardly, abject, or mean.**

**desperate:**

1. reckless or dangerous because of despair or urgency: a desperate killer.
2. having an urgent need, desire, etc.: desperate for attention.
3. leaving little or no hope; very serious or dangerous: a desperate illness.
4. extremely bad; intolerable or shocking: clothes in desperate taste.
5. extreme or excessive.
6. making a final, ultimate effort; giving all: a desperate attempt to save a life.
7. **actuated by a feeling of hopelessness.**
8. having no hope; giving in to despair.

**helpless:**

Unable to help oneself; powerless or incompetent.
Lacking support or protection:
**Impossible to control; involuntary:**

**afflict** : **To inflict grievous physical or mental suffering on.**

Meaning for the Hebrew word used for "**poor**" in **this verse** (Web reference)
1) poor, **afflicted**, humble, **wretched**
a) poor, needy
b) poor and weak
c) poor, weak, afflicted, wretched
d) humble, lowly

நமக்கு கர்த்தர் கொடுத்திருக்கும் இந்த வாழ்க்கையில், பல நேரங்களில்,
நமக்கு நாமே உதவவோ, நாம் மற்றவர்களுக்கு உதவவோ முடியாத அளவிற்கு இருக்கிறோம்.
நாம் அமர்ந்திருந்து ஆழ்ந்து சிந்தித்தால். . .. இதை உணரலாம்.
இந்த உலகத்தின் வாழ்க்கை சூழ்நிலைகள்
நம்மை அந்த அளவிற்கு பெலவீனப்படுத்துகிறது.. . வருத்தப்படுத்துகிறது. . .
(afflicted – வருத்தப்படுகிற . . ) வருத்தப்பட்டு பாரஞ்சுமப்பவர்களை இயேசுகிறிஸ்து தம்மிடம் அழைக்கிறார். அவரிடம் கற்றுக்கொள்ள சொல்கிறார். அதைத்தான் நாம் தொடர்ந்து செய்யவேண்டும்.
*உதாரணமாக உங்கள் சிந்தனைக்கு:*
நாம் பல நேரங்களிலே நமது அன்றாட வாழ்க்கையிலே பணத்தை செலவழிக்கும்போது, அவ்வப்போது சில்லரை காசுகள் வைத்திருப்போம். அதிலே அவ்வப்போது நமக்கு இயலும்போது 1$ / 2$ coinsஐ ஒரு Boxல் சேர்க்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி நாம் ஒரு வருடத்தில் ஒரு சிறு தொகையை சேர்த்து, அதை india, srilanka, africa போன்ற நாடுகளில் உள்ள, நம்மைவிட அதிகமாக கஷ்டத்திலும் வறுமையிலும் உள்ள ஒருவருக்கோ ஒரு associationக்கோ கொடுக்கிறோம் என வைத்துக்கொள்ளுங்கள்.
அது அவர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க நல்ல உதவியாக இருக்கும்.
அப்படி நாம் Boxல் போடாமல் இருந்தால், அந்த சிறிய தொகையை எப்படி செலவழித்திருப்போம் என்று நமக்கே தெரியாமல் போயிருக்கலாம்.
*இந்த உதாரணத்திலே நீங்கள் மேலும் சிந்திக்க வேண்டியது. . .இந்த தொகையை நாம் சாராதணமாக செலவழித்தாலும், செலவழிக்காமல் இப்படி சேர்த்து வைத்தாலும் நமது அன்றாட வாழ்க்கையிலே நாம் ஒன்றும் பெரிய மாற்றத்தை கண்டிருக்கமாட்டோம்.*
*ஏனென்றால் அந்த சில்லரைக் காசு நமது கணக்கிலேகூட தெரியாத ஒரு சிறிய தொகையாக இருக்கலாம்..*
இப்படியாக, நமக்கே தெரியாத இந்த சிறிய தொகை, இந்த உலகத்தில் எங்கோ ஒருவருக்கு ஒரு உதவி தொகையாக இருக்கிறது என்று சொன்னால். . . . .
நம்மாலே முடிந்த இலகுவான காரியங்களினாலே, இந்த உலகத்திலே நம்மிலும் ஏழ்மையாக இருக்கும் மக்களுக்கு உதவமுடியுமென்றாலும். . . . .
அதை நாம் செய்ய இயலாதபடி நமது அன்றட சூழ்நிலைகளும் நமது சிநதனைகளும் ஆட்கொண்டு, நம்மை அறியாமலே, நம்மை பலவீனப்படுத்துகிறது.
இப்படி எவ்வளவோ காரியங்களை நாம் சிந்தித்தால். . ..
நாம் எவ்வளவு பலவீனர்கள் என்பதை உணரலாம். . .. வருத்தப்படலாம். . .. கவலைப்படலாம்.
கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?
*என்று கிறிஸ்து சொல்லியும் நாம் கவலைப்படகிறோம்.*
ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.
*என்று நாம் அறிந்தும் நாம் கவலைப்படுகிறோம்.*
தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை
*என்று நாம் அறிந்திருந்தும் நாம் கவலைப்படுகிறோம்.*
*பிதா, குமாரன், பரிசுத்தஆவி முவரும் நமக்கு உதவ இருக்கும்போதும், நாம் கவலைப்படகிறோம்.*
We are such a poor guy……afflicted man…..
இந்த ஏழை கூப்பிட்டான், இன்று நான் கர்த்தரிடம் நான் வேண்டினால் அந்த ஏழை என்பதற்கு நான் முதலில் உங்களுக்கு விவரித்த பல அர்த்தங்கள் இப்போது விளங்கியிருக்கும் என நினைக்கின்றேன்.
இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.

*பழைய ஏற்பாட்டு வசனத்தின் சிந்னைக்கு எப்பொழுதுமே புதிய ஏற்பாட்டு வசனம் அதை உறுதிப்படுத்தி நம்மை மேலும் உற்சாகப்படுத்தும். இப்பொழுது புதிய ஏற்பாட்டு ஒருவசனத்தைப் பார்ப்போம்.*

**ரோமர்/ Romans 7:24**

நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?
O wretched man that I am! who shall deliver me from the body of this death? (KJV)
What a **wretched man** I am! Who will rescue me from this body of death? (NIV)
Oh, what a **miserable person** I am! Who will free me from this life that is dominated by sin and death? (NLT)
O **unhappy and pitiable and wretched man** that I am! Who will release and deliver me from [the shackles of] this body of death? (AMP)

இதிலே உள்ள நிர்ப்பந்தமான என்ற வார்த்தையை சற்று பார்ப்போம். .

**Wretched:** (English-Tamil Dictionary)

very miserable, பரிதாபகரமான, துர்ப்பாக்கியமான; very poor, மிக ஏழையான; worthless, இழிவான, உபயோகமற்ற;

நிர்ப்பந்தம்: (தமிழ்-English அகராதி)

1. கட்டாயம்; compulsion, 2. விடுபடமுடியாத நிலை; compulsion, pressure.

**Wretched:** (from English-English Dictionary)

1. in poor or **pitful circumstances**. 2. characterized by or causing misery.
3. despicable; base. 4. poor, inferior, or paltry.

Meaning for the Greek word used for "**wretched**" in **this verse** (Web reference)

1) enduring toils and troubles, 2) **afflicted, wretched**

இந்த உலகத்தின் சூழ்நிலைகள் நம்மை மேற்கொள்ளாமல் வாழ்வது நம்மாலே முடியாது. . ..
அது நமது பெலத்துக்கு ஞானத்துக்கும் அப்பாற்பட்டது.
*இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம் நமது சிந்தனைக்கு:*
*Water. தண்ணீர் மிகவும் நன்றாக வசதியாக, சுலபமாக நமக்கு கிடைக்கிறது. இந்த நாட்டில். . .*
நம்மை அறியாமலே, நம்மாலே கட்டுப்படுத்த முடியாத நிலையிலே பல நேரங்களிலே இதை வீணாக்குகிறோம். . .. .

காலையிலே நான் எழுந்து முகத்தை கழுவ தண்ணீரை open செய்யும்பொழுது, அது மிகவும் குளிர்ச்சியாக இருப்பதால் கொஞ்சநேரம் அதை openல் விட்டபிறகுதான், அதை use பண்ணுகிறேன். நான் அப்படி வீணாக கொட்டுகிற அந்த தண்ணீரை எப்படி தவிர்ப்பது ? என்று சிந்தித்தால், அது நமது அன்றாட வாழ்க்கையிலே நம்மால இயலாத காரியமாக தோன்றலாம்.

இந்த உலகத்திலே எவ்வளவு மனிதர்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரிந்ததே. இருந்தும் என்னாலே இந்த வீணாக கொட்டுகிற தண்ணீரை ஒன்றும் செய்யமுடியவில்லையே. . . ..

அதுமட்டுமல்ல, பலர் காலையிலே Tooth brush பல் துலக்கும்போது Tape waterஐ அப்படியே openலே விடுவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் அதை பயன்படுத்தவில்லை என்றாலும் அதை அப்படியே விட்டுவிடுவது அவர்களை அறியாமலே செய்யக்கூடிய ஒரு காரியமாக உள்ளது.

நம்முடைய சூழ்நிலையிலே நமக்கு அந்த தண்ணீர் வீணாவது நமக்கு ஒரு பிரச்னையாக இல்லை. பலர் இந்த தண்ணீருக்கு கஷ்டப்படுவதை நாம் உணர்ந்தாலும் நாம் வீணாக்குவதை தவிர்க்க முடியாமல் இருக்கிறோம். அப்படியே தவிர்த்தாலும் தண்ணீர் இல்லாதவர்களுக்கு அதை கொடுக்கவும் இயலாமல் இருக்கிறோம்.

பல நேரங்களிலே நாம் பல காரியங்களை நாம் விரும்பினாலும் செய்ய முடியாமல் இருக்கும்.

இப்படியாக நமது உலக வாழ்க்கையின் சூழ்நிலைகளை நீங்கள் ஆராய்ந்து சிந்தித்துப் பார்த்தால். . . . .ஆண்டவரே!
நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?
என்றுதான் கேட்க வேண்டியிருக்கும்.

இதற்கு ஒரே வழி. . . . கர்த்தரிடம் மன்றாடுவதுதான். அவரது ஜீவனுள்ள வார்த்தைகளின் ஆலோசனைகள் நம்மிலே ஜீவித்தால்.. . . . நமக்கு விடுதலை. . .. . ஆமென்.

**நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை.**
**ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். (ரோமர் 7:18,19)**
**For I have the desire to do what is good, but I cannot carry it out.**
**For what I do is not the good I want to do; no, the evil I do not want to do—this I keep on doing. (Romans 7:18,19)**

**ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். (யாக்கோபு 4:17)**

**Anyone, then, who knows the good he ought to do and doesn't do it, sins. (James 4:17)**

**நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? (ரோமர் 7:24)**
**What a wretched man I am! Who will rescue me from this body of death? (Romans 7:24)**

---

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.. . . (ரோமர் 7:25)**
**Thanks be to God—through Jesus Christ our Lord! (Romans 7:25)**

**கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.**
**because through Christ Jesus the law of the Spirit of life set me free from the law of sin and death. (Romans 8:2)**

**குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். (யோவான் 8:36)**

---

**So if the Son sets you free, you will be free indeed. (John 8:36)**

இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். *என்ற விசுவாசத்தோடு. . .*
நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரித்து. . .
*அந்த* கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் கர்த்தரிடத்தில் மன்றாடுவோம்.
தயவுசெய்து அனைவரும் எழுந்திருந்து நமது விண்ணப்பங்களை ஏறெடுக்குமுன் அவரை ஸ்தோத்தரிப்போம்.

**Let us pray**